# <u>செயற்குழுக் கூட்டம் (30-07-2022)</u>

இன்று (30-76-2022) நமது இயக்கத் தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் துணைத் தலைவர், பொது செயலாளர், மூன்று செயலாளர்களும் மற்றும் ஒரு பார்வையாளரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. இயக்கத்தின் 2022 ஜூன் மற்றும் ஜூலை 2022 மாத வரவு-செலவு அறிக்கை வாசிக்கப்பட்டது. வரவு-செலவு கணக்கு சரியானதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2. சென்ற பொதுக்குழுக் கூட்டம் ஜூலை 10ம் தேதி பாண்டியன் ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு உறுப்பினர்களின் வருகை மிகவும் (quorum) குறைவாக இருந்ததால், அந்தப் பொதுக்குழுக் கூட்டத்தை மீண்டும் நிறைவேற்ற 04-09-2022 அன்று ஞாயிற்றுக்கிழமை நடத்த தலைவர் முடிவு எடுத்துள்ளார். இதற்கான அறிவிப்பை பிரகடனப்படுத்துமாறு தீர்மானிக்கப்பட்டது.

3. இயக்கத் தற்பொதைய தலைவர், திரு N. சுப்ரமனியன், தனது தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்வதாக கடிதம் கொடுத்தார். தலவரின் ராஜினாமா ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. இதனால் காலியான தலைவர் பதவிக்கு வேறு ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். திரு V. கார்த்திகை ராஜன் அவர்கள் திரு மனுராஜ் **(LM-3)** அவர்களைத் தலைவராக முன் மொழிய, துணைத்தலைவர் திரு V ஐயப்பன் அவர்கள் வழி மொழிந்தார். தொலைபெசி மூலம் திரு மனுராஜிடம் சம்மதம் பெறப்பட்டு, திரு மனுராஜ் அவர்களைத் தலைவராக நியமனம் **(co opt)** செய்யு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது

5. காலியாக உள்ள செயலாளர் (மக்கள் தொடர்பு) பதவிக்கு உறுப்பினர் திரு B பாளாஜி அவர்களை நியமிக்கக் கோரி நிதி செயலாளர் திரு A. தணசேகரன் அவர்கள் முன் மொழிய, பதிப்பக செயலாளர் திரு G கோவிந்த சாமி அவர்கள் வழி மொழிய செயற்குழுவில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது.

6. திரு N. சுப்ரமனியன் அவர்கள் பதவியில் இருந்து விலகினாலும், அவரை சட்ட ஆலோசகராக **(LEGAL ADVISER)** நியமனம் செய்ய தீர்மானம் நிறைவேறியது. அனைத்து நிர்வாகக் குழுக் கூட்டங்களிலும் அவர் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்

7. இறுதியில் பொதுச் செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| V. ஐயப்பன் | V கார்த்திகை ராஜன் |
| துனைத் தலைவர் | பொதுச் செயலாளர் |